# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil

₹ 10/-

REACHING NATIONS

India's National Spiritual Newspaper

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: SIS. SERENA BEVIN

Vol. XXVIII | MARCH 2023 | No. 03


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்.

சங்கீதம் 66:12-20

12. மனுஷரை எங்கள் தலையின்மேல் ஏறிப்போகப்பண்ணினீர்; தீயையும் தண்ணீரையும் கடந்துவந்தோம்; செழிப்பான இடத்தில் எங்களைக் கொண்டுவந்து விட்டீர்.
13. சர்வாங்க தகனபலிகளோடே உமது ஆலயத்திற்குள் பிரவேசிப்பேன்;
14. என் இக்கட்டில் நான் உன் உதடுகளைத் திறந்து, என் வாயினால் சொல்லிய என் பொருத்தனைகளை உமக்குச் செலுத்துவேன்.
15. ஆட்டுக்கடாக்களின் நிணப்புகையுடனே கொழுமையானவைகளை உமக்குத் தகனபலியாக இடுவேன்; காளைகளையும் செம்மறியாட்டுக் கடாக்களையும் உமக்குப் பலியிடுவேன்.
16. தேவனுக்குப் பயந்தவர்களே, நீங்கள் எல்லாரும் வந்து கேளுங்கள்; அவர் என் ஆத்துமாவுக்குச் செய்ததைச் சொல்லுவேன்.
17. அவரை நோக்கி என் வாயினால் கூப்பிட்டேன். என் நாவினால் அவர் புகழப்பட்டார்.
18. என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார்.
19. மெய்யாய்த் தேவன் எனக்குச் செவிகொடுத்தார், என் ஜெபத்தின் சத்தத்தைக் கேட்டார்.
20. என் ஜெபத்தைத் தள்ளாமலும், தமது கிருபையை என்னைவிட்டு விலக்காமலும் இருந்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக.

# உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்!

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்கள் தலைமைச் சபையில் அளித்த செய்தி)

(யோவான் 16:20)

உங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும்! உங்கள் கவலைகள் கண்ணீர் எல்லாம் மறைந்து விடும். கலங்காதே மகனே, கலங்காதே மகளே, என் இயேசு கைவிடமாட்டார். கடந்ததை நினைத்துக் கலங்காதே, நடந்ததை மறந்துவிடு, கர்த்தர் புதியன செய்திடுவார், இன்றே நீ காண்பாய். இதை இன்றே நீ காண்பாய். கலங்கிடவே வேண்டாம், கலங்கிடவே வேண்டாம். கர்த்தர் கைவிட மாட்டார். நொருங்குண்ட இதயம் தேற்றுகிறார். உடைந்த உள்ளம் தாங்குகிறார். காயங்கள் அனைத்தையும் கட்டுகிறார். கண்ணீர் துடைக்கின்றார். உன் கண்ணீர் துடைக்கின்றார். கலங்கிடவே வேண்டாம், கலங்கிடவே வேண்டாம். கர்த்தர் கைவிட மாட்டார். திராணிக்கு மேலாக சோதிக்கப்பட ஒருநாளும் விடமாட்டார். தாங்கிடும் பெலன் தருவார். தப்பிச்செல்ல வழி செய்வார். தப்பிச்செல்ல வழி செய்வார். கலங்கிடவே வேண்டாம். கலங்கிடவே வேண்டாம். கர்த்தர் கைவிட மாட்டார்.

– Fr. S.J. பெர்க்மான்ஸ்.

இது கர்த்தர் உங்களுக்கு அருளும் அருள் வாக்கு.




அழைப்பின் எதிரொலி!

## கிறிஸ்தவ யூடியூப் சானல்!

*போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களுடன் நேரடியாக ஜெபிக்க ஓர் நல்வாய்ப்பு!!*

5 நிமிடத்தில் தேவ செய்தியும், ஜெபமும்!!

தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு

தினந்தோறும் - காலை 5.00 மணிக்கு

தமிழ் ஞாயிறு ஆராதனை - காலை 8.30 மணிக்கு

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)



## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...



**"கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்."** - சங்கீதம் 23:1

கர்த்தருக்குள் பிரியமானவர்களே!

ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை அன்புடன் வாழ்த்துகிறோம்.

**அழைப்பின் எதிரொலி** பத்திரிகை மூலம் தேவ ஆசீர்வாதம் பெற்ற பல மக்களுக்காக தேவனுக்கு மகிமை செலுத்துகிறோம். சமீபத்தில் நாம் ஆரம்பித்த யூடியூப் சானலின் 5 நிமிட அதிகாலை செய்தி உங்களுக்கு நன்மை அளிப்பதை நினைத்து தேவாதி தேவனைத் துதிக்கிறோம். எங்களால் இயன்ற எல்லாவற்றையும் செய்து, உங்களுக்கு நன்மை உண்டாகப் பிரயாசப்படுகிறோம்.

நாட்கள் செல்லச் செல்ல தேவ ஊழியம் வளருகிறது. மக்கள் பெரிதும் பயன்பெறுகின்றனர். ஆனால் ஆதி அப்போஸ்தலர் காலங்களில் ஏற்பட்ட அதே போராட்டங்களையும், கஷ்டங்களையும் நாங்கள் அனுபவிக்கிறோம். பல்வேறுவித தேவ ஊழியங்களின் மூலம் சாத்தானின் கோட்டைகளை உடைக்கும் பணியை சுவிசேஷத்தின் மூலம் செய்வதால், சாத்தான் எரிச்சலடைவதில் அதிசயம் இல்லையே!

நாங்களோ தேவகிருபையால் சற்றும் தளர்வடையாமல் "ஆதி முற்பிதாக்கள் மற்றும் ஆதி அப்போஸ்தல உபதேசங்களை அவற்றின் சாரம் சற்றேனும் குறையாமல் இப்புதிய சந்ததியினருக்கு எடுத்து இயம்பும்" இந்த ஊழியத்தைச் செய்து வருகிறோம். எங்களுக்காக தயவுகூர்ந்து ஜெபியுங்கள் என்று உங்களை வேண்டுகிறோம். ஏதாவது ஒரு வழியில் எங்களுடன் தோள் கொடுத்து நிற்கக் கூடுமானால் நீங்களும் முன் வாருங்கள். உங்கள் தயவும், ஐக்கியமும் எங்களுக்கு அவசியமாகத் தேவைப்படுகிறது.

இந்த மாதமும், வரும் மாதங்களிலும் எங்களுக்கு ஏராளமான பிரயாணங்கள் உண்டு. நீங்கள் உங்கள் ஜெபங்களில் நினைவு கூர வேண்டும் என்று கேட்கிறோம். காரணம் உண்மையான ஆத்துமபாரம் கொண்ட ஊழியப்பாதை மிகவும் கடினமானது. நம் ஊழியர்களின் குடும்ப அங்கத்தினர் பலரும் பல்வேறு வியாதிகளினால் பாதிக்கப்பட்டுள்ளனர். உங்கள் ஜெபங்களும், அன்பும்தான் எங்கள் ஆறுதல்.

உங்கள் கடிதங்களையும், நல் ஆலோசனைகளையும் எதிர்பார்க்கிறோம். நாங்கள் உங்களை எங்கள் ஜெபங்களில் நினைவு கூருகிறோம். மட்டுமின்றி, உங்கள் ஜெபக்குறிப்புகளை கருத்தாய் தேவனிடத்தில் கொண்டு சென்று ஜெபிக்கிறோம். தேவ அன்பினால் உங்களை நேசிக்கிறோம்.

தவறாமல் காணிக்கை அனுப்பித் தாங்குகிற எங்கள் அன்பு சகோதர, சகோதரிகளுக்கு தேவன் தகுந்த பலனைத் தருவாராக! ஆமென்.

கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,

**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் & அலெக்ஸ் சாம்சன் சாம்.**

(+91) 98412 71858 / 98410 71858, மின்னஞ்சல் : samselvaraj333@gmail.com

---

கடந்த சில நாட்களாக உலகின் பல தேசங்களில் வாழும் பலதரப்பட்ட மக்களை நான் சந்தித்துப் பேச நேர்ந்தது. இவர்களில் உயர்தரக் கல்வியாளர்கள், முன்னிலை மருத்துவர்கள், அதிகாரத்தில் மூழ்கியிருக்கும் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள், சிறந்தத் தொழிலதிபர்கள் மற்றும் செல்வந்தர்கள், ஆலோசனையாளர்கள், சாதாரண மற்றும் நடுத்தர மக்கள், கல்வி அறிவில் குறைந்தவர்கள், தெய்வ நம்பிக்கை உள்ளவர்கள் மற்றும் இல்லாதவர்கள், மாணவ, மாணவியர்கள், உல்லாசப் பிரயாணிகள், புண்ணியஸ்தலப் பிரயாணிகள், வியாபாரிகள், நடிகர்கள்,

## OUR MISSION POLICY

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.


**CHIEF EDITOR**
Angeline Selvakumari Henry, M.A., M.Ed.

**MANAGING EDITOR**
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

**ADMINISTRATION**
Bro. N. Prakasam, M.A., General Manager

**EDITORIAL BOARD**
Sis. Jesy Veena Sam
Sis. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Dr. A. Richard Samuel, M.A., Ph.D.
Rev. Dr. K.R. Rajasekaran

**EDITOR, PUBLISHER & PRINTER**
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 95661 31858

**CORE LEADERS**
Bro. K. Puratchivendan
Bro. A. Edward Durai
Bro. A. Alvin
Bro. K. Abraham
Sis. Dhanalakshmi Chinnaiah

**E.mail ID**
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

**WEBSITES**
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com

**YOUTUBE CHANNEL**
Echo of His Call


Our Ministries: ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) ✪ BIBLECOR - Postal Courses (3 languages) ✪ Media Ministry ✪ Online Courses ✪ Theological Correspondence Courses (2 languages) ✪ Church Planting ✪ Nehemiah Bible Colleges ✪ Gospel Printing Press ✪ Great Commission Partners ✪ St. Paul's Matriculation School ✪ Crusades ✪ Community Development

எழுத்தாளர்கள், விசுவாசிகள் என்றும் தேவ ஊழியர்கள் என்றும் தங்களை அழைத்துக் கொள்கிறவர்கள் முதலிய எல்லாருடைய வாழ்க்கையிலும் வித்தியாசம் வித்தியாசமான கஷ்டங்களும், போராட்டங்களும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செயல்படுவதைப் பார்க்க முடிந்தது. யாருமே இதற்கு விதி விலக்காக இல்லை என்பதையும் புரிந்து கொள்ள முடிந்தது. இதன் காரணமாகத்தான் மனிதர்கள் ஏதாவது வழியில் விடுதலைக் கிடைக்குமா? என்று தங்களுக்குத் தெரிந்த தெய்வங்களைத் தேடி மிகுந்தப் பிரயாசங்களை மேற்கொண்டு பலப் புண்ணியஸ்தலங்களுக்குச் செல்லுகின்றனர்.

சில நேரங்களில் சில பக்தர்கள் தாங்கள் என்ன செய்கிறோம் என்றுத் தெரியாமலே பலப் பிரயாசங்களை மேற்கொள்கின்றனர். சில வேளைகளில் ஏராளமான நாட்கள் விரதம் எடுத்துப் பல சடங்குகளை மேற்கொண்ட பின்னர் குறிப்பிட்ட புண்ணிய ஸ்தலத்திற்குப் புறப்படுவதற்கு முன் தேவ ஊழியர்களாகிய எங்களிடம் வந்து, தங்கள் பிரயாணம் இனிதே அமைய பிரார்த்தனை செய்யும்படி வேண்டி நிற்கிறார்கள். இதனை நான் குற்றப்படுத்தவோ அல்லது கொச்சைப் படுத்தவோ விரும்பவில்லை. ஆனால், மனிதருடைய வாழ்க்கையின் உள்ளான பகுதியில் உள்ள ஓர் ஏக்கத்தையும், மனிதருக்கும் தெய்வத்திற்கும் இடையே உள்ள இடைவெளி அல்லது வெற்றிடத்தையும் காண முடிகிறது அல்லவா? நல்ல மனிதர்கள் தங்கள் வாழ்க்கையில் தேவைப்படுகிற உண்மையான விடுதலையைப் பெற்று அனுபவிக்க அவர்களுடைய கலாச்சாரங்களும், பாரம்பரியங்களும் பெருமளவில் தடைகளாக அமைந்துள்ளன.


இந்த அலைமோதும் மற்றும் இன்னல்கள் நிறைந்த உலக வாழ்க்கையில், மிகவும் சிறிய அளவிலான மக்கள் மட்டும் தேவராஜ்யம் என்றும் தேவராஜ்யத்தின் விஸ்தாரம் என்றும், தங்களை இந்த உலக மக்களின் கோட்பாடுகளிலிருந்தும், வழிமுறைகளிலிருந்தும் விலக்கிக்கொண்டு, வேறுபட்டு, பரிசுத்தத்துடன் மகிழ்ச்சியாக வாழ்கின்றனர். இதற்குக் காரணம் என்ன? இதுதான் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த வல்லமை சாதாரண மனிதருடைய வாழ்க்கையிலும் செயல்படுவது என்று கூறலாம். இந்த அனுபவம் நம் ஒவ்வொருவருக்கும் நிச்சயம் அவசியம்.

இந்த உயிர்த்தெழுந்த வல்லமை ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் செயல்படும்போது, அவன் உபயோகமற்ற ஒரு நபராக இருந்தாலும் மிகுந்த உபயோகமுள்ளவனாக மாறுவான். அகோரமான வியாதிப் படுக்கையில் இருக்கும் மக்களுடைய வாழ்க்கையில் இந்த உயிர்த்தெழுந்த வல்லமை இடைபடும்போது அவர்களின் வியாதிகள் அகற்றப்படுகின்றன. ... **என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்.** யோவான் 11:25 என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்னார். ஒரு மனிதனுடைய சரீரத்தில் உள்ள ஒரு அங்கம் செயல்படாமல் போனாலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவரை தேவகுமாரன் என்று விசுவாசித்து, அறிக்கையிட்டால் அவன் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் அற்புதத்தைப்பெற்று நல்ல சுகத்துடன் செயல்பட முடியும்.

## உயிரோடு எழுந்த லாசரும், இயேசு கிறிஸ்துவும்!

இயேசு கிறிஸ்துவின் சினேகிதனான லாசரு என்பவன் மரித்தான். ஆனால் ஆண்டவர் இயேசு அவனைத் தம் வல்லமையால் உயிரோடு எழுப்பினார். வயது முதிர்ச்சியினால் அவன் மறுபடியும் மரித்துப் போயிருப்பான். இயேசுகிறிஸ்துவும் மரித்தார். ஆனால், மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்தார். மறுபடியும் அவர் மரிக்கவில்லை! உலகத்தில் பிறந்த எல்லா தெய்வ அவதாரங்கள் என்னப்பட்ட மனிதர்களும் மரித்திருக்கிறார்கள். அவர்களுடைய சரீரங்கள் அடக்கம் பண்ணப்பட்டக் கல்லறை ஒன்றும் திறந்திருக்கவில்லை. ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கல்லறை மட்டும் இன்றும் திறந்திருக்கிறது. இது சரித்திரச் சான்றாகும்.

இயேசு கிறிஸ்துவை அடக்கம் பண்ணிய கல்லறைக்கு சரியானப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. **அவர்கள் போய்க்** (கல்லறையை மூடிவைத்திருந்த) **கல்லுக்கு முத்திரைபோட்டு, காவல்வைத்து, கல்லறையைப் பத்திரப்படுத்தினார்கள்.** மத்தேயு 27:66. ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூன்றாம் நாளில் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார் (மத்தேயு 28:1–8).




**Statement about ownership and other particulars about the Newspaper Echo of His Call (Tamil) - Form IV**
**(See Rule 8)**

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | **New No. 8 & 10, Old No. 18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai - 600 005.** |
| 2. Periodicity | : | **Monthly** |
| 3. Printer, Editor, Owner & Publisher | : | **S. Sam Selva Raj** (Same Address) |
| 4. Nationality | : | **Indian** |

I, **S. Sam Selva Raj** hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

**March 2023** **S. Sam Selva Raj.**

ஒய்வுநாள் முடிந்து, வாரத்தின் முதலாம் நாள் ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் மகதலேனா மரியாளும், மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள். ஆண்டவர் தாம் மரித்து மூன்றாம் நாள் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுவதை தமது சீஷர்களுக்கு முன்னறிவித்திருந்தும் அவருடன் மூன்றரை வருடங்கள் சேர்ந்து ஊழியம் செய்தும், அவரோடு உடன் இருந்தும், அவர்கள் தங்கள் தங்கள் இல்லங்களில் இருந்துவிட்டார்கள். தங்கள் உண்மை அன்பை வெளிப்படுத்தத் தவறிவிட்டார்கள். இது நிச்சயமாகவே அவர்களுக்கு துக்கத்தையும், மன வருத்தத்தையும் பின்னர் கொடுத்திருக்கும். இத்தகையக் குறைபாடுகளை இரட்சகர் இயேசு கிறிஸ்து பெரியத் தவறாகக் கருதாமல், பின்பு அவர்களுக்கும் காட்சியளித்தும், அவர்களைத் தேற்றியும், அவர்களைச் சிறந்த அப்போஸ்தலர்களாக மாற்றியும், அவர்கள் அவல நிலையினை சந்தோஷமாக மாற்றினார்.

அன்பு நண்பரே, தேவ அன்பினைப் பல முறைகளில், பல விதங்களில் பெற்று அனுபவித்தபோதிலும், வாழ்க்கையில் ஏற்பட்ட சிறு சிறு சந்தேகங்களும், உலக ஆசைகளும், மாம்ச இச்சைகளும் உங்களுக்கு நன்மை செய்த தேவாதி தேவனைவிட்டு வெகுதூரம் உங்களை இழுத்துச் சென்று விட்டது அல்லவா? மனம் கலங்காதிருங்கள், உங்கள் குறைகளை அறிக்கை செய்யுங்கள், இயேசுவிடம் மீண்டும் வாருங்கள். உங்கள் துக்கம் நிச்சயமாகவே சந்தோஷமாக மாறும்.

## தேவ மக்களுக்கு ஓர் எச்சரிக்கை!

தேவனோடுள்ள உறவைக் கட்டிக் காத்து, அதன்மூலம் உண்டாகும் சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்ள காலஞ்சென்ற என்னுடைய போதகர் G. சுந்தரம் அவர்கள் அளித்த இரண்டு கட்டளைகளை உங்களுக்குச் சொல்லுகிறேன்.

எந்த ஒரு பிரசித்திப் பெற்ற தேவ ஊழியரும், சுவிசேஷகரும் உலகம் எங்கும் போய் தேவனுக்கு ஊழியம் செய்யுங்கள். ஆனால் உங்கள் அரையில் ஒரு கயிற்றைக் கட்டிக்கொண்டு அதன் மறுபுறத்தை உங்களுக்குத் தேவன் கொடுத்துள்ள உங்கள் சொந்த சபையில் கட்டிக்கொள்ளுங்கள். கர்த்தருடைய நாளாகிய ஞாயிற்றுக்கிழமைகளில் உங்களுக்கு ஊழியம் இல்லாத பட்சத்தில் நேரடியாக உங்கள் ஆலயத்திற்குச் சென்று அங்குள்ள தேவ மக்களுடன் இணைந்து தேவாதி தேவனை ஆராதித்து, அங்குள்ள தேவ ஊழியருடையப் பிரசங்கத்தை, தேவ வார்த்தையாக ஏற்றுப் பொறுமையாய்க் கேட்க வேண்டும். அவற்றிற்குக் கீழ்ப்படிய வேண்டும்.

இரண்டாவதாக, நாம் ஒவ்வொருவரும் விதவிதமானப் பாவ சிந்தனைகளிலிருந்தும், பாவப் பழக்க வழக்கங்களிலிருந்தும், தீய உறவுகளிலிருந்தும், ஆண்டவருடைய மேலான கிருபையினாலும், அவர் நம்மேல் வைத்த இரக்கத்தினாலும் அவற்றின் அகோரப் பிடியிலிருந்து விடுதலைப் பெற்றிருக்கிறோம். ஆகவே நாம் எந்தக் குறிப்பிட்ட பாவம் அல்லது அடிமைத்தனத்திலிருந்து விடுதலைப் பெற்றோமோ அந்தப் பாவம் அல்லது அடிமைத்தனத்தைக் குறித்து, விடுதலைப் பெற்றப் பின்னரும் அவற்றைத் தொடராதபடிக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும். அவை எந்த நேரத்திலும் தேவ மக்களைத் திரும்பவும் தாக்குவதற்கு ஏதுக்கள் உண்டு. எச்சரிக்கையாக இருங்கள்!

உதாரணமாக நீங்கள் போதைப் பொருட்களுக்கு அடிமையாயிருந்து, இயேசு கிறிஸ்துவின் மூலம் விடுதலைப் பெற்றிருந்தால், அந்த விடுதலையை மிகவும் கருத்தாய்ப் பேணிக் காக்க வேண்டும். போதைப் பொருட்கள் விற்கப்படும் கடையின் பக்கமாகச் செல்லவோ, அங்கு பணத்திற்கு சில்லறை வாங்கவோகூடப் போகக்கூடாது. மட்டுமின்றி, உங்கள் பழைய தீய நண்பர்களின் உறவிலிருந்து ஒரு பரிபூரணமான விடுதலை பெற்று, அவர்களிடம் உறவு கொள்ளாமை வேண்டும். இதில் உறுதியாய் இருப்பவர்களுக்கு ஒரு உன்னத சந்தோஷமும், பூரண வெற்றியும் கிடைக்கும்.

## மகதலேனா மரியாளும், மற்ற மரியாளும்!

ஏழு பிசாசுகளினால் பாதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்துவினால் விடுதலையடைந்த மரியாளும், இன்னொரு மரியாளும், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் சரீரம் அடக்கம் பண்ணப்பட்ட கல்லறைக்குப் போனார்கள். **அப்பொழுது, பூமி மிகவும்**



தொடர்ச்சி 6-ம் பக்கம்.....


# நெகேமியா வேதாகமக் கல்லூரி, சென்னை.

*வேளச்சேரி – முழுநேரம் – இந்தி*
*சேப்பாக்கம் – மாலை நேரம் – தமிழ்*
(திங்கள், செவ்வாய், வியாழன்)

*Registered Candidate for Membership*
Asia Theological Association (ATA)

**உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 53 வருட அனுபவ ஸ்தாபனம்.**

Certificate in Theology : ஒரு வருடம்
Diploma in Theology : இரண்டு வருடங்கள்

**கல்வித்தகுதி : 10ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்**
**உடனே அணுகவும் !**

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் 2023 மார்ச் 19 முதல் ஏப்ரல் 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

### தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

மார்ச் 19 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக்கல்லூரி** மற்றும் **அஞ்சல்வழி வேதாகமக்கல்வி** ஆகியவற்றை கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக...

மார்ச் 20 ⇨ 16.01.2023–ல் நடைபெற்ற சபை ஊழியர்களின் கூட்டத்தை ஆசீர்வதித்ததற்காக...

மார்ச் 21 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** யூ டியூப் சானலில் புதிய subscribers அதிகரித்து வருவதற்காக ...

மார்ச் 22 ⇨ நமது பணியாளர்கள் அனைவரது குடும்பத்தினர் மீதும் கர்த்தருடைய ஆசீர்வாதம் பொழியப் பட்டதற்காக...

மார்ச் 23 ⇨ சபை பாகுபாடின்றி கிறிஸ்தவ குழந்தைகள் மற்றும் இளைஞர்களிடம் புது எழுச்சி வெளிப் பட்டதற்காக...

மார்ச் 24 ⇨ நமது களப்பணியாளர்களும் அவர்களது குடும்பத்தினரும் தொலைதூரப் பகுதிகளில் தேவப்பணியில் ஈடுபட்டிருப்பதற்காக...

மார்ச் 25 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்கள் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் உள்ள பல்வேறு இடங்களில் மேற்கொண்ட பயணம் வெற்றிகரமாக முடிந்த கிருபைக்காக...

மார்ச் 26 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், விசுவாசப்பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும் மற்றும் அவர்கள் குடும்பத்தினரையும் கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக...

மார்ச் 27 ⇨ **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை ஊழியத்தினை 1969 முதல் இன்றுவரை ஆசீர்வதித்ததற்காக...

மார்ச் 28 ⇨ நமது சுவிசேஷ அச்சகத்தில் உள்ள திறமைவாய்ந்த பணியாளர்களின் மூலமாக அச்சகப் பணிகள் தங்குதடையின்றி நடைபெற்று வருகிறதற்காக...

மார்ச் 29 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி**யின் இணை ஆசிரியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்காக...

மார்ச் 30 ⇨ இணை ஊழியங்களுக்கு பொருளாதார ஆதரவு மற்றும் ஜெப ஆதரவு கொடுக்க வைத்த கிருபைக்காக...

மார்ச் 31 ⇨ உலகத்திலுள்ள வேதாகமம் மற்றும் கிறிஸ்தவ நூல்களை அச்சிடும் பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களின் தேவைகளை சந்தித்து வருவதற்காக ...

ஏப்ரல் 01 ⇨ தங்களின் தனிப்பட்ட தேவைகளுக்கு மத்தியிலும் நமது ஊழியங்களுக்கு பொருளாதார ஆதரவு அளித்து வரும் பங்காளர்களை தந்த கிருபைக்காக ...

ஏப்ரல் 02 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தாருக்கு உடல்நலம் மற்றும் தேவபாதுகாப்பு அளித்து வருகிற கிருபைக்காக...

ஏப்ரல் 03 ⇨ மிஷனரிகளால் தொடங்கப்பட்ட கிறிஸ்தவ பள்ளிகளின்மூலம் உலகை ஆசீர்வதித்து வருகிற கிருபைக்காக...

### தேவனிடத்தில் ஜெபியுங்கள்

ஏப்ரல் 04 ⇨ உலக சபைகளின் எழுப்புதலுக்காக...

ஏப்ரல் 05 ⇨ எதிர்பாராத இயற்கை சீற்றங்களிலிருந்து காப்பாற்றப்பட வேண்டி...

ஏப்ரல் 06 ⇨ **அழைப்பின் எதிரொலி**யின் தலைமைச் சபை மற்றும் கிளைச்சபையின் விசுவாசிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் நலனுக்காக...

ஏப்ரல் 07 ⇨ நமது தலைமை மற்றும் கிளைச்சபைகளில் நடைபெறும் புனித வெள்ளி மற்றும் ஈஸ்டர் ஆராதனைகளுக்காக...

ஏப்ரல் 08 ⇨ நமது முழுநேர மற்றும் மாலை நேர **நெகேமியா வேதாகமக் கல்லூரியின்** மாணவர்கள் நல்லொழுக்கம் மற்றும் அர்பணிப்புடன் விளங்க...

ஏப்ரல் 09 ⇨ போதைப் பொருட்களின் அடிமைத்தனத்திலிருந்து குழந்தைகள் மற்றும் இளைஞர்களைப் பாதுகாக்க வேண்டி...

ஏப்ரல் 10 ⇨ உலகில் பரவிவரும் தவறான பழக்கவழக்கங் களில் இருந்து குழந்தைகள் மற்றும் இளைஞர்களை பாதுகாக்க வேண்டி ...

ஏப்ரல் 11 ⇨ அரசாங்கத் தேர்வை எதிர்நோக்கி இருக்கும் நமது 10–ம் வகுப்பு **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** மாணவர் களுக்காக...

ஏப்ரல் 12 ⇨ உலகில் நடைபெற்றுவரும் குழந்தைக் கடத்தலை அகற்ற வேண்டி...

ஏப்ரல் 13 ⇨ 2023–24ம் கல்வி ஆண்டிற்கான நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** தகுதியான மாணவர்களின் சேர்க்கைக்காக ...

ஏப்ரல் 14 ⇨ ஜுன் 03, 2023 அன்று நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரி**யின் பட்டமளிப்பு விழா சிறப்பாக நடைபெற வேண்டி...

ஏப்ரல் 15 ⇨ இந்த மாதத்திற்கான அனைத்து பொருளாதார தேவைகளையும் சந்திக்க வேண்டி ...

ஏப்ரல் 16 ⇨ 2023–24ம் கல்வி ஆண்டிற்கான நமது முழுநேர மற்றும் மாலைநேர **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளின்** தகுதியான மாணவர்களின் சேர்க்கைக்காக...

ஏப்ரல் 17 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்கள் நமது பன்மொழி ஊழியங்களில் புதிய தரிசனங்களுடன் செயல்படவும் ஆசீர்வதிக்கப் படவும் வேண்டி...

ஏப்ரல் 18 ⇨ உலக நாடுகளின் ஜனாதிபதிகள், பிரதமர்கள், முதலமைச்சர்கள் மற்றும் அரசியல் சபை உறுப்பினர்களை ஆசீர்வதிக்க வேண்டி...

... 4-ம் பக்கத் தொடர்ச்சி



**அதிரும்படி, கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்திறங்கி வந்து, கல்லறையின் வாசலிலிருந்த கல்லைப் புரட்டித் தள்ளி, அதின் மேல் ஏறி உட்கார்ந்தான்.** மத்தேயு 28:2.

அன்பு சகோதரனே சகோதரியே, உங்கள் வாழ்க்கையிலும் புரட்ட முடியாத கற்கள் பல இருக்கின்றன. அவைகளை எளிதில் உங்களாலோ அல்லது நீங்கள் நம்பியிருக்கும் பெலசாலிகளாலோ அல்லது செல்வந்தர்களாலோப் புரட்டித்தள்ள முடியாமல் இருக்கும். ஆனாலும் திடன் கொள்ளுங்கள், வழியே இல்லாத இடத்திலும் ஆண்டவர் உங்களுக்கு ஒரு வழியை உண்டாக்குவார். அது வெகு தூரத்தில் இல்லை. உங்களைக் காக்கும்படிக்கு தேவன் தம்முடையத் தூதர்களுக்குக் கட்டளை யிட்டுள்ளார். அவர்கள், உங்களுக்காகச் செயல்பட வந்து கொண்டிருக்கின்றனர். உங்களுக்கு எதிர்த்து நின்று உங்களைத் தேவ ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொள்ள விடாதபடித் தடுத்துத் தள்ளும் பெரிய தடைக்கல்லை அவர்கள் தள்ளிவிட்டு, தடைகளையும் எதிர்ப்புகளையும் உடைத்தெறிந்துவிட்டு அந்தக் கல்லின் மேல் ஏறி உட்காருவார்கள். நீங்கள் ஆசீர்வா தத்தின் ஆரம்பப்படியில் நிற்கிறீர்கள். எனவே உறுதியாய்த் தரித்து நில்லுங்கள். உங்கள் துக்கம் வெகு சீக்கிரத்தில் சந்தோஷமாக மாறும்!

## நம் வாழ்க்கையின் தவறானக் கொள்கைகள்!

கர்த்தருடைய பிள்ளைகளே, தைரியமடையுங்கள். உங்கள் வாழ்க்கைப் பாதையில் எது குறுக்கிட்டாலும், அதை மாற்றியமைக்க வல்லவர் இந்த உயிர்த் தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்து. இந்த மனுக் குலத்தின் ஆசீர்வாதத்தின் திறவுகோல் எந்த உலக மனிதரிடத்திலும் இல்லை. அது ஜீவனுள்ள தேவனாகிய கர்த்தர் இயேசு கிறிஸ்துவிடம்தான் உள்ளது. உங்கள் சகல துக்கங்களையும் அவரிடம் விட்டுவிடுங்கள். அவரை விட்டு விட்டு தூரமாய்ச் செல்வது நமக்குப் பெருத்தத் துக்கங்களையும், பிரச்சினைகளையும் உண்டு பண்ணும். தனிப்பட்ட வாழ்க்கையி லும், தேவ ஊழியத்திலும் உங்களில் சிலர் சற்றுப் பின்வாங்கி விட்டீர்கள். இது மகாப் பெரும் தவறு. ஏழ்மையிலிருந்தும், ஆழக்குழியிலிருந்தும் உங்களைத் தூக்கி எடுத்து இன்று உயர்வான இடத்தில் தேவன் வைத்திருக்கிறாரே! இவற்றையெல்லாம் எப்படி மறுப்பீர்கள்? இத்தகையத் தவறுகளை இனி நீங்கள் இழைக்காமலிருக்க விழித்திருங்கள். மனம் திரும்புங்கள். அப்படியானால் உங்கள் துக்கம் நிச்சயமாக சந்தோஷமாக மாறும்.

## இழந்து போனவர்களைத் தேடும் ஆண்டவர் இயேசு கிறிஸ்து!

தாம் சொன்னபடியே மூன்றாம் நாளில் இயேசுகிறிஸ்து மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்த பின்னரும் அவரது சீஷர்கள் அந்த மூன்று நாட்களுக்குள் தங்கள் பழைய வாழ்க்கைக்கு கடந்து சென்று விட்டனர் என்பது விந்தையாயிருக்கிறது. அங்கேயும் தேவன் தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார். சீஷர்கள் திபேரியாக் கடற்கரைக்குச் சென்று மறுபடியும், தாங்கள் விட்டுவந்த மீன்பிடித் தொழிலுக்குப் போய்விட்டார்கள். அங்கே சென்ற கர்த்தர் சற்றேனும் தமது வருத்தத்தைக் காட்டாமல் தம் திவ்ய அன்பினைக் காட்டி, "பிள்ளைகளே, சாப்பிட ஏதாவது கிடைக்குமா?" என்று கேட்டார்.

இரவுமுழுவதும், வேலை செய்தும் மீன் எதுவும் அகப்படவில்லை என்றார்கள். நானும் என் நீண்ட கால அனுபவத்தில் பார்த்திருக்கிறேன், தேவ ஊழியத்தைக் கையில் எடுத்து விட்டு ஏதாவது ஒரு காரணத்தால் அதை விட்டு விட்டு உலகப் பிரகாரமான வேலைகளைக் கையில் எடுப்பவர்களுடைய முடிவு மகா பயங்கரமாக முடிந்திருக்கின்றது. இந்தத் தவறுகளை யாரும் செய்யக் கூடாது.

தமது அன்பின் சீஷர்களிடம் அதிகமான மீன்களைப் பிடிப்பதற்கான வழியை அங்கே அவர்களுக்குக் காண்பித்து அதிக மீன்களைப் பிடிக்க வகை செய்தார். இவர் உன்னத உலக இரட்சகர் இயேசு கிறிஸ்து! ஓர் ஆழமான உன்னத அழைப்பி னால் உங்களைத் தெரிந்துகொண்டு, வரங்க ளையும், தாலந்துகளையும் தாராளமாய்த் தந்து உயர்த்தியவர் இரட்சகர் இயேசு! உங்கள் ஜெபத்தால் ஓடியப் பிசாசுகள் எத்தனை எத்தனை? தீர்க்கமுடியாத வியாதிகளிலிருந்து விடுதலை பெற்றவர்கள் எத்தனை எத்தனை பேர்? ஏதோ ஒரு குறிப்பிட்ட பிரச்சினை அல்லது உலக ஆசை உங்களைக் கவர்ந்து கொண்டதால் தேவ அன்பை விட்டு ஓடி விட்டீர்களே!?

தொடர்ச்சி 9-ம் பக்கம்.....



## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்

1. ஜெப உதவி – 24 மணி நேரம்
2. வேதாகமக் கடித முறைக் கல்வி – தமிழ், ஆங்கிலம், இந்தி
3. அழைப்பின் எதிரொலி – பத்திரிகைகள் (16 மொழிகள்)
   தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒரியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகன்.
4. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் – (இரு இடங்களில்) மாலை நேரம் / முழு நேரம்
5. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
6. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்)
7. பயிற்சி வகுப்புகள்
8. சுவிசேஷக் கூட்டங்கள்
9. கைப்பிரதி விநியோகம் – தொடர் ஊழியம்
10. சுவிசேஷ அச்சகம் – சுவிசேஷ பிரசுரங்கள்
11. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி
12. சிறுவர் வேத பாடசாலை – ஞாயிறு காலை 8.30 மணி மாலை 4.00 மணி
13. தமிழ் ஆராதனைகள் – ஞாயிறு காலை 8.00 மணி & 10.00 மணி
14. இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 4.00 மணி
15. தெலுங்கு ஆராதனை – ஞாயிறு மாலை 5.00 மணி
16. தமிழ் – ஆங்கிலம் ஆராதனை – ஞாயிறு மாலை 6.00 மணி
17. போதகர் ஆலோசனைக் கூட்டம் – ஞாயிறு மாலை 4.00 மணி
18. பெண்கள் ஆராதனை – புதன் மாலை 5.30 மணி
19. இறையியல் கல்வி – புதன் மாலை 6.30 மணி
20. ஆண்கள் ஆராதனை – வெள்ளி இரவு 7.00 மணி
21. சீஷத்துவக் கூட்டம் – சனி மாலை 6.00 மணி
22. வீட்டுக் கூட்டங்கள் – செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி
23. விசேஷ திருவிருந்து – பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி
24. ஊழியர்கள் கூடுகை – முதல் சனிக்கிழமை மாலை 5.30 மணி
25. பெற்றோர் ஜெபம் – முதல் ஞாயிறு மாலை 4. 00 மணி
26. இரவு ஜெபம் – 2–ம் வெள்ளி இரவு 9.30 மணி
27. உபவாச ஜெபம் – மூன்றாம் சனிக்கிழமை காலை 9.30 மணி
28. திருவிருந்து – 2–ம் ஞாயிறு ஆராதனைகள்
29. அதிகாலை ஜெபம் – தினமும் காலை 5.00 மணி
30. ஊழியர் ஜெபம் – தினமும் காலை 9.00 மணி
31. அலுவலகம் – தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர)

## அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

### இந்திய மாணாக்கர்களுக்கு மட்டும்

## I. வேதாகமத் தபால் கல்வி

தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.



"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

## II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :



தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்அஞ்சல்: biblecor@yahoo.co.in

## அழைப்பின்எதிரொலி, சென்னை

## தேவை

1. **கல்லூரி முதல்வர்**
   நெகேமியா வேதாகமக் கல்லூரி,
   தகுதி: M. Div. அல்லது M.Th.
2. **கம்ப்யூட்டர் பணியாளர்கள்**
   தகுதி : பட்டப்படிப்புடன் கம்ப்யூட்டர் தட்டச்சு

தொடர்புக்கு:
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org
வாட்ஸ்அப் எண் : +91-98412 71858

## வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| Account Name | : ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST |
| Account Number | : 1023 2923 805 |
| Bank Name | : STATE BANK OF INDIA |
| Branch | : TRIPLICANE, CHENNAI - 600 005 |
| IFSC Code | : SBIN 0000249 |
| SWIFT Code | : SBI NIN BB 455 |



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

## தெய்வீக சந்திப்பு!

கர்த்தருடைய கிருபையால், சென்னை சேப்பாக்கத்தில் உள்ள கிறிஸ்தவரல்லாத மக்களைப் பற்றிய பாரத்தை 1971–ம் வருடம் ஆண்டவர் எனக்கு அளித்தார். இங்கு வாழும் மக்கள் நல்ல மக்கள், தெய்வ பக்தி அதிகம் உள்ளவர்கள், கடுமையான உழைப்பாளிகள். ஒவ்வொரு நாளும் இரவு பகல் எனறு பாராமல் உழைக்கிறவர்கள். ஏராளமான சினிமா தியேட்டர்கள், கிரிக்கெட் ஸ்டேடியம், காவல்துறை நிலையம், உலகின் 2வது மிக நீளமுள்ள அழகான மெரினா கடற்கரை, இராஜபாதை என்று அழைக்கப்படும் காமராஜர் சாலை, மிகவும் நீளமான அழகான சென்னையின் பிரதான சாலையான அண்ணா சாலை என்றழைக்கப்படும் மிகப் பெரிய சுறுசுறுப்பான மவுண்ட் ரோடு, கலங்கரை விளக்கம், தலைமைச் செயலகம், இரண்டு மிகப் பிரதானமான சென்னை எழும்பூர், சென்ட்ரல் போன்ற தொடர்வண்டி நிலையங்கள், தமிழ்நாட்டின் தலைமைச் செயலகம், இதர தலைமை அலுவலகங்கள், கூவம் ஆறு, பிரபலமான சாந்தோம் தேவாலயம், மாநிலக் கல்லூரி, அண்ணா நினைவு இடம் போன்ற ஏராளமான முக்கிய இடங்களைத் தன்னகத்தேக் கொண்டுள்ளது சேப்பாக்கம். இது பழைய சென்னைப் பட்டணத்தின் ஒரு முக்கிய பகுதி. இங்கு வாழ்ந்த பரம ஏழைகள் முதல் பெரிய செல்வந்தர்கள், கல்வியாளர்களைப் பற்றிய ஆவிக்குரிய பாரம் என்னை அழுத்தியது.

அப்பொழுது, நானும், என் உடன் ஊழியர்களாக இருந்தவரும் தற்போது பாண்டிச்சேரி பட்டணத்தில் தொழில் அதிபராகவும் இருக்கிற சகோதரர் I. சந்திரா சிங் அவர்களுடனும் சென்னையில் பிரபல தொழில் அதிபராக இருக்கும் சகோதரர் I. மோசஸ் பாக்கியமணி அவர்களும் சேர்ந்து முதல்படியாக சென்னை சேப்பாக்கம் பகுதியில் உள்ள மக்களை உலகத்துக்குள் மூழ்க வைத்திருந்த எல்லா சினிமா தியேட்டர்களையும் கர்த்தர் அகற்றும்படி தினமும் இரவு 8.00 மணி முதல் 10.00 மணி வரை சென்னை மெரினா கடற்கரை மகாத்மா காந்தி அவர்களின் உருவச்சிலைக்குப் பின்னால் முழங்காலில் நின்று ஜெபித்தோம்.

ஆச்சரியம்! ஆனால் உண்மை!!

ஆண்டவர் எங்கள் ஜெபங்களுக்கு உண்மையாகவே பதில் அளித்தார். நாங்கள் அதிசயப்படும் அளவுக்கு, இந்தப் பகுதியில் இருந்த பாரகன் தியேட்டர், ஸ்டார் தியேட்டர், எல்பின்ஸ்டன் தியேட்டர், தேவி தியேட்டர், சாந்தி தியேட்டர், அண்ணா தியேட்டர், சித்ரா தியேட்டர் போன்ற எல்லா திரையரங்குகளும் அகற்றப்பட்டு விட்டன. இதன்மூலம் படக்காட்சி மோகத்திலும், இதர இச்சையிலும் மூழ்கியிருந்த ஏராளமான மக்களை சுவிசேஷத்தால் சந்தித்து அவர்களை பரிசுத்த வாழ்க்கைக்குள் கொண்டு வரமுடிந்தது. புதிதாக இரட்சிக்கப்படும் மக்களுக்கு இந்த இடத்தில் ஒரு ஆவிக்குரிய சபை இல்லாமல் இருந்தது, எங்களுக்கு கவலை அளித்தது. இது கடினம் என்றும் முடியாது என்ற நிலையும் இருந்தது. எனவே, 1980–ம் ஆண்டு சேப்பாக்கம் அக்பர் சாகிப் தெருவை ஒரு இந்திய தேவசபையை ஆரம்பிக்க தேவன் உதவி செய்தார். ஆனால் யாரும் தைரியமாக ஞாயிற்றுக் கிழமைகளில் ஜீவனுள்ள தேவனை ஆராதிக்க வராமல் இருந்தார்கள். என் மனைவியும், குழந்தையாக இருந்த மகளும் மட்டுமே சுமார் 5 வருடங்களாக ஆலய ஆராதனைகளில் கலந்து கொண்டனர். பல எதிர்ப்புகளின் மத்தியில் நான் என் அக்கார்டியன் என்ற என் இசைக்கருவியை வைத்து பிரசங்கம் செய்தேன்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை காலையில் சரியாக 8.00 மணிக்குள் ஆலயப் பகுதியை சுத்தம் செய்து ஆராதனை ஆரம்பிக்க வேண்டிய நேரம் வந்தது. இடத்தை தயார் செய்து விட்டேன். ஆனால் யாரும் வர மாட்டார்களே! என்ற எண்ணத்தால் பக்கத்தில் இருந்த என் படுக்கை அறையில் சென்று சற்று ஓய்வு எடுக்கலாம் என்று சற்று என் கண்களை மூடினேன். தூக்கம் வரவில்லை. ஆனால் சற்று மயக்கம் போல் இருந்தது. அப்போது ஒரு கனவு கண்டேன்.

அதாவது, திடீரென்று நான் இருந்த வீடு முன்னும் பின்னும் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. ஓர் நல்வாசனையை உணரமுடிந்தது. திடீரென்று சுமார் 50 வயது மதிக்கத்தக்க ஓர் பெரிய மனிதர் சபை நடத்துவதற்கு ஆயத்தப்படுத்தப்பட்ட இடத்திற்குள் நுழைந்தார். அங்கு இருந்த எல்லா மின்விளக்குகளையும் எரியச் செய்து, மின் விசிறிகளை ஓட விட்டார். பிறகு அமைதியாக நெடுமுழங்காலில் நின்று ஜெபிக்க ஆரம்பித்தார். அந்த அறை முழுவதும் ஆட்களால் நிறைந்திருந்தது.

நான் உடனே பதறி அடித்துக்கொண்டு சத்தமாக என் மனைவியையும், மகளையும் அழைத்துக் கொண்டு அந்த ஜெபாலயத்திற்குள் சென்று ஜெபிக்க ஆரம்பித்தவுடன், அந்த நபர்



*Rev. Dr.G.* பெவின் லாரன்ஸ் & சகோதரி செரீனா பெவின்

மறைந்து விட்டார். நானும், என் மனைவியும், என் மகளும் பாவ அறிக்கை செய்து, ஆராதனையை ஆரம்பித்தோம்.

சில நிமிடங்களில் ஒரு சகோதரனும், சகோதரியும், மகனுமாக வெள்ளுடை அணிந்து எதிர்பாராதவிதமாக எங்களுடன் முழங்காலில் நின்றனர். அவர்கள்தான் தற்போது பிரபலமான கொடைக்கானல் பட்டணத்தை தலைமையாகக் கொண்டு ஊழியம் செய்யும் தலைமைப் போதகர் மற்றும் மருத்துவ டாக்டர் G. பெவின் லாரன்ஸ் அவர்களும், நம்முடைய **அழைப்பின் எதிரொலி பத்திரிகை** சபையின் தலைமை இணை ஆசிரியர் சகோதரி செரீனா பெவின் அவர்களுமாவார்கள். இப்போது அவர்கள் குடும்பமாகப் பெரிய ஊழியங்களை செய்கின்றனர்.

அன்று முதல் நானும் தவறாமல் யார் வந்தாலும், வராவிட்டாலும் என் எல்லா சபை ஆராதனைகளையும் சரியான நேரத்தில் ஆரம்பித்து வருகிறேன். இதை என் உடன் ஊழியர்களுக்கும், கல்லூரி மாணவர்களுக்கும் கற்றுக் கொடுக்கிறேன். கர்த்தர் நல்லவர். ***

---

... 6-ம் பக்கத் தொடர்ச்சி

## உங்கள் வாழ்க்கையை சற்று சிந்தித்துப் பாருங்கள்!

உங்கள் பிள்ளைகளுடைய வாழ்க்கையிலும், குடும்ப சிக்கல்களிலிருந்தும் எப்படி எல்லாம் உங்களை தேவன் காப்பாற்றினார்? உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்பட்ட வியாதிகள், தோல்விகள், துன்பங்கள் இவை எல்லாவற்றிலிருந்தும், ஆண்டவரை நோக்கிப் பார்த்தபோது எத்தனை அற்புத அதிசயங்களைக் கர்த்தர் உங்களுக்குக் கட்டளையிட்டு உங்களை விடுவித்தார்? உங்கள் வாழ்க்கையில் ஏதாவது ஒரு வழியில் தேவனுடைய ஒத்தாசையை நீங்கள் பெற்றிருந்தால், தேவன் உங்கள் பக்கமாகவும், உங்கள் மேல் பட்சமாகவும் இருக்கிறார் என்றுதானே அர்த்தம்? இந்நிலையில் அவரை உங்கள் வாழ்க்கையில் புறக்கணியாமல் அவருக்கு உங்கள் வாழ்க்கையில் முதல் இடம் கொடுங்கள். உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்.

மனிதர்களாகிய நம் வாழ்க்கையில் நமக்கு விரோதமாக வரும் அநேக புயல்களை ஒவ்வொரு நாளும் சந்திக்கிறோம். அந்த புயல்கள் வெவ்வேறான திசைகளிலிருந்தும், பலதரப்பட்ட மக்களிடமிருந்தும் வித்தியாசமான வேகங்களோடு வருகின்றன. புயல்களும், பெருங்காற்றும், சுழல்காற்றும், சூறாவளிகளும் நம்மை எதிர்கொள்கின்றன. இந்த புயல்களின் தன்மைகளைக் குறித்தும், இவை நம்மைத் தாக்கும் போதும் நம் வாழ்வில் இவைகள் எப்படிப்பட்ட பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்றும் தேவ வல்லமையால் இவைகளை மேற்கொள்வது எப்படியென்றும் பார்ப்போம்:

சூழ்நிலைகள் கடுமையாவதற்கு முன்பே நாம் செயல்படவேண்டும். எப்பொழுதுமே சூழ்நிலைகளுக்குள் நாம் சிக்கிக்கொள்வதற்கும், அச்சூழ்நிலைகள்



நம் கையை விட்டு எல்லையை மீறுவதற்கும் இடையே குறிப்பிட்ட இடைவெளி இருக்கிறது. நாம் எல்லாவற்றையும் நம் பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு தேவன் தம் வல்லமையை நமக்கு அளிக்க கிருபை மிகுந்தவராயிருக்கிறார். ஞானத்தோடும், ஜாக்கிரதையுடனும் நம் சூழ்நிலைகளை சரிக்கட்ட தேவன் விரும்புகிறார். உள்ளத்திலே சூழ்நிலைகளால் வரும் குழப்பத்தையும், மக்களாலும், இதர வழிகளினாலும் ஏற்படுகிற நெருக்கத்தையுமே நான் புயல்கள் என்று கூற விரும்புகிறேன். அந்த புயல் எழும்புவதை அறிந்தவுடன் பாதுகாப்பு நடவடிக்கைகளை நாம் எடுக்காவிடில், துன்பத்திற்குள்ளேச் செல்ல நேரிடும். ஆதலால்தான் கிறிஸ்து இயேசு யோவான் 9:4ல் வரப்போகிற இராக்காலத்தை குறித்து பேசுகிறார். அது வருவதற்கு முன்னே அவர் அவரது பணிகளை முடிக்கவேண்டும் என்று கூறினார், முடித்தார். சாத்தானும் தனது நேரத்திற்காக காத்திருந்து தேவபிள்ளைகளை மடங்கடிக்க ஆயத்தமாக இருக்கிறான் (1 பேதுரு 5:8). தேவன் உங்கள் வாழ்வின்மேல் முழு ஆளுகை செய்கிறார் என்கிற அறிவோடு நீங்கள் சந்திக்கும் பாரத்தை மேற்கொள்ளுங்கள். எரிச்சலடையாதீர்கள். கவலைப்படாதீர்கள். எல்லாச் சூழ்நிலைகளிலும் தேவனைத் துதிக்க முயலுங்கள். தேவனுடைய வாக்குத் தத்தங்களை அறிக்கை செய்யுங்கள். தேவன் என்னோடும், எனக்காகவும் இருக்கிறார். நான் சூழ்நிலைகளின்மேல் முற்றிலும் ஜெயங் கொள்ளுகிறவன் என்று அறிக்கையிடுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

************

## முக்கிய அறிவிப்பு

### பிரதிநிதிகள் தேவை!

அண்மைக்காலமாக **அழைப்பின் எதிரொலியின்** சிங்களம், நேபாளி, உருது மற்றும் ஆப்பிரிக்கன் மொழிகளில் உள்ள வாசகர்களின் எண்ணிக்கை, வயதான நண்பர்களின் இழப்பு மற்றும் நண்பர்களின் இடமாற்றம் காரணமாக கணிசமாகக் குறைந்து வருவதை நாங்கள் காண்கிறோம். தற்போதுள்ள வாசகர்களிடமிருந்து ஈடுபாடும் குறைந்திருக்கிறது. வாசகர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான வழிகள் குறித்து ஆலோசித்து வருகிறோம்.

பத்திரிகையை தொடர்ந்து நடத்த நமது முயற்சியின் முதல்படியாக சிங்களம், நேபாளி, உருது மற்றும் ஆப்பிரிக்கன் மொழிகளில் உள்ள வாசகர்களிடமிருந்து கீழ்க்கண்ட உதவிகளை எதிர்பார்க்கிறோம்.

(அ) உங்களுடைய மொழியில் வெளிவரும் பத்திரிகைகளை இலவசமாய் பெற, புதிய வாசகர்களை சேர்த்து அவர்களின் முகவரிகளை அனுப்பி உதவுங்கள்.

(ஆ) உங்களுடைய சொந்த இடங்களிலேயே **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையின் நகல்களை எடுத்து உங்களின் அன்பானவர்களுக்கு அனுப்புங்கள்.

(இ) உறவினர் மற்றும் நண்பர்களின் புதிய முகவரிகளை அனுப்பக்கூடிய மற்றும் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைப் பிரதிகளை எங்களிடமிருந்து இலவசமாகப்பெற்று ஊக்கமுடன் விநியோகிக்கக்கூடிய பிரதிநிதிகளாக ஊழியம் செய்து உதவி செய்யுங்கள்.

இது குறித்த கருத்துக்களையும் எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

– ஆசிரியர் குழு

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/21-23 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/21-23

## அழைப்பின் எதிரொலி

**YouTube (யூடியூப்)**

உங்களுக்கு நேரம் கிடைக்கும் போது நமது **அழைப்பின் எதிரொலி** (ECHO OF HIS CALL) **யூடியூப்** (YouTube) சேனலைப் பார்த்து Subscribe செய்ய வேண்டுகிறோம். நன்றி!

– ஆசிரியர்

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

| | | |
|---|---|---|
| Branch | : | **Triplicane, Chennai-5** |
| Name | : | **S. Sam Selva Raj** |
| A/C No. | : | **1023 2934 679** |
| IFSC | : | **SBIN 00 00 249** |
| SWIFT CODE | : | **SBI NIN BB 455** |

### *2. Bank : ICICI Bank*

| | | |
|---|---|---|
| Branch | : | **Anna Salai, Chennai-6** |
| Name | : | **Echo of His Call** |
| A/C No. | : | **6038 0502 2319** |
| IFSC | : | **ICIC 000 6038** |

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

| | | |
|---|---|---|
| Branch | : | **Triplicane, Chennai-5** |
| Name | : | **Echo of His Call Educational Trust** |
| A/C No. | : | **1023 2923 805** |
| IFSC | : | **SBIN 00 00 249** |

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**

*****

E.mail : sam@echoofhiscall.org

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

**❋ வருட சந்தா ரூ. 100/–     ❋ ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

**அழைப்பின் எதிரொலி,**

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**

தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858

**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**

**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**

**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/21-23**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2021-23**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS / 1 Patrika Channel"**
**on 28th FEBRUARY 2023**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**

***JESUS LOVES YOU!***

**To**

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers,** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**